**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி**

முன்னிலை : திருமதி.ஜி.அபர்ணா,M.A.,L.LM., B.Sc.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,சிங்கம்புணரி.

2026 ம் ஆண்டு ஜீலை திங்கள் 31 ம் நாள் வெள்ளிக்கிழமை

(2057 திருவள்ளுவர் ஆண்டு ஸ்ரீ பராபவ வருடம் ஆடி திங்கள் 15 ம் நாள்)

**ஆண்டு பட்டிகை வழக்கு எண் 89/2022**

**(CNR No:TNSV160001752022 )**

அரசுக்காக:
சார்பு ஆய்வாளர்,
சிங்கம்புணரி காவல் நிலையம்,
குற்ற எண்:271/2021 -- குற்ற முறையீட்டாளர்

/ எதிர் /

1.சோலைமலை (22/2021)
த/பெ.காளிதாஸ்,
1/26, கக்கன்ஜி நகர்,
சிங்கம்புணரி.
சிவகங்கை மாவட்டம்.

2. காளிதாஸ் (42/2021)
த/பெ.கண்ணன்
1/26, கக்கன்ஜி நகர்.
சிங்கம்புணரி
சிவகங்கை மாவட்டம். -- குற்றம்சாட்டப்பட்டவர்கள்

**வழக்கின் சுருக்கம்**

| | | |
|---|---|---|
| 1. | குற்றம்சாட்டப்பட்டவர்கள் காவல் அடைப்பிற்கு உட்படுத்திய காலம் | 1 ம் குற்றம்சாட்டப்பட்டவர்<br>20.03.2022 – 28.03.2022<br>2 ம் குற்றம்சாட்டப்பட்டவர்<br>30.12.2021 – 07.01.2022 |
| 2. | நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் | 20.07.2022 |
| 3. | இவ்வழக்கு கோப்பினை அமர்வு நீதிமன்றத்திற்கு மேல்விசாரணைக்கு அனுப்பப்பட்ட நாள் | இல்லை |
| 4. | குற்றம்சாட்டப்பட்டவர்களிடம் | 07.01.2025 |

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.07.31 17:21:56 +0500

| | | | | |
|---|---|---|---|---|
| | கு.வி.மு.ச பிரிவு 240–ன் கீழ் குற்றச்சாட்டு குறித்து வினவப்பட்டு குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | | | |
| 5. | குற்றவியல் பல்வகை மனு தாக்கல் செய்த விவரமும் அதன் முடிவும் (கு.வி.மு.ச.பிரிவு 317 மனு தவிர) | (1) 2 வது குற்றம்சாட்டப்பட்டவரின் 437 சிஆர்.பி.சி–யின் கீழான பிணை மனு சிஆர்.எம்.பி. எண்:2083/2021 உத்தரவு நாள்:06.01.2022– அனுமதிக்கப்பட்டது.<br>(2) 1 வது குற்றம்சாட்டப்பட்டவரின் பிணை மனு சிஆர்.எம்.பி. எண்:271/2021 நாள்:28.03.2022 – அனுமதிக்கப்பட்டது. (மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றம், சிவகங்கை)<br>(3) 1 வது குற்றம்சாட்டப்பட்டவரின் சரண்டர் மனு சிஆர்.எம்.பி. எண்:402 நாள்:28.03.2022 – அனுமதிக்கப்பட்டது. | | |
| 6. | அரசு தரப்பு சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | அரசு தரப்பு சாட்சிகள் | முதல் விசாரணை செய்த நாள் | குறுக்கு விசாரணை செய்த நாள் |
| | | அ.சா.1 | 11.02.2026 | 11.02.2026 |
| | | அ.சா.2 | 18.03.2026 | 18.03.2026 |
| | | அ.சா.3 | 18.03.2026 | 18.03.2026 |
| | | அ.சா.4 | 09.04.2026 | 09.04.2026 |
| | | அ.சா.5 | 09.04.2026 | 09.04.2026 |
| | | அ.சா.6 | 27.05.2026 | 27.05.2026 |
| | | அ.சா.7 | 17.06.2026 | 17.06.2026 |
| | | அ.சா.8 | 02.07.2026 | 02.07.2026 |
| | | அ.சா.9 | 02.07.2026 | 02.07.2026 |
| 7. | கு.வி.மு.ச. பிரிவு 313 (1) (ஆ) ன் | 27.07.2026 | | |

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.07.31 17:22:09 +0500

| | | |
|---|---|---|
| | படி குற்றம்சாட்டப்பட்டவர்களிடம் வினாக்கள் வினவப்பட்ட நாள் | |
| 8. | குற்றம்சாட்டப்பட்டவர்கள் தலைமறைவான விவரம் மற்றும் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜரான விவரம் மற்றும் ஆஜர்படுத்தப்பட்ட விவரம் | எதிரிகளின் சரண்டர் மனு: சிஆர்.எம்.பிஎண்:5/2026 – 21.05.2026 அனுமதிக்கப்பட்டது. எதிரிகளின் அட்வான்ஸ் மனு: சிஆர்.எம்.பிஎண்:6/2026 – 21.05.2026 அனுமதிக்கப்பட்டது. எதிரிகளின் ரீகால் மனு: சிஆர்.எம்.பிஎண்:7/2026 – 21.05.2026 அனுமதிக்கப்பட்டது. |
| 9. | மேல் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தடை உத்தரவு குறித்த விவரம் | இல்லை |

இவ்வழக்கானது ஆண்டு பட்டிகை வழக்கு எண்:89/2022 என இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 27.07.2026 அன்று இறுதியான விசாரணைக்கு வந்தபொழுது அரசுத்தரப்பில் அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.அறிவுடைநம்பி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும் ஆவணங்களை பார்வையிட்டும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும் இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

**தீர்ப்புரை**

சிங்கம்புணரி காவல் சார்பு ஆய்வாளர் 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 506(1)ன் கீழும், 2வது எதிரி மீது இதச பிரிவுகள் 323, 506(2)ன் கீழும் குற்றம் புரிந்ததாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>2. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>**

2(1). இவ்வழக்கில் கடந்த 25.12.2021ம் தேதி மாலை 17.30 மணியளவில் நிகழ்நிலை புகார்தாரர் வினோத்குமார் மற்றும் கருப்பையா ஆகிய இருவரும்

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.07.31 17:22:15 +0500

சிங்கம்புணரி மயானத்தில் நடந்த உறவினர் இறுதி காரியத்தில் கலந்து கொண்டிருந்த போது கருப்பையா 2வது எதிரியை பார்த்து சற்று தள்ளி நிற்க சொன்ன போது 1வது எதிரி சோலைமலை நிகழ்நிலை புகார்தாரரை பார்த்து ஏண்டா தயோழி என் அப்பாவையே தள்ளி நிற்க சொல்லுறியாடா தேவடியா பயலே என்று அசிங்கமாக திட்டியதால் ஏன் இப்படி அப்பாவை அசிங்கமாக திட்டுகிறாய் என்று நிகழ்நிலை புகார்தாரர் கேட்டதற்கு 1வது எதிரி அருகில் கிடந்த அபாயகரமான ஆயுதமான கல்லை எடுத்து நிகழ்நிலை புகார்தாரர் நெற்றியில் தாக்கி, பின்னர் கையால் தாக்கி கீழே தள்ளியதாகவும், 2வது எதிரி நிகழ்நிலை புகார்தாரரை கைகளால் தாக்கி சாதாரண காயத்தை ஏற்படுத்தியதாகவும், எதிரிகள் இருவரும் கைகளில் கற்களை எடுத்து கொண்டு தலைக்கு மேல் தூக்கி கொல்லாமல் விடமாட்டோம் என குற்றமுறு கொலை மிரட்டல் விடுத்த குற்றம் புரிந்துள்ளதாக குற்றமுறையீடுபவரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

3. புலன்விசாரணை அதிகாரி தாக்கல் செய்த இறுதி அறிக்கையை கோப்பிற்கு எடுத்த இந்த நீதிமன்றம் குற்றம்சாட்டப்பட்டவர்களின் குற்றச்செயல் குறித்து அடிப்படை முகாந்திரம் இருப்பதாக கருதியதால் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு அழைப்பாணை அனுப்பியது. அழைப்பாணையின் பேரில் எதிரிகள் இந்த நீதிமன்றத்தில் ஆஜராகினார்கள். இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச.பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டன.

4. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்த போது, இவ்வழக்கின் 1ம் குற்றம்சாட்டப்பட்டவர் மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2)ன் கீழும், 2வது குற்றம்சாட்டப்பட்டவர் மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(2)ன் கீழும் குற்றச்சாட்டு வனைய போதிய முகாந்திரம் இருந்ததினால் கு.வி.மு.ச. பிரிவு 240ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து தமிழில் விளக்கி வினவிய போதும், குற்றம்சாட்டப்பட்டவர்கள் குற்றவாளி இல்லை என்று குற்றச்சாட்டை மறுத்தும் வழக்கு விசாரணை வேண்டினர். எனவே அரசு தரப்பு சாட்சிகளின்

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.07.31 17:22:21 +0500

விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.9 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையான சான்றாவணங்கள் குறியிடப்பட்டன. சான்று பொருளும் எதுவும் அரசு தரப்பில் முன்னிடப்படவில்லை.

**6. அரசு தரப்பு சாட்சிகள் அளித்த சாட்சியம் மற்றும் ஆவணங்களிலிருந்து அறியப்பெரும் அரசு தரப்பு வழக்கின் விபர சுருக்கம் பின்வருமாறு :–**

6(1). அ.சா.1 வினோத்குமார் புகார்தாரர் மற்றும் காயம்பட்ட நபராவார். இவர் தனது சாட்சியத்தில் சுமார் 5 வருடத்திற்கு முன்பு சிங்கம்புணரியில் தன்னுடைய உறவினர் என் மாமாவின் அம்மா இறந்த நிகழ்விற்கு தான் மாயாணத்தில் இறுதி நிகழ்ச்சியில் இருந்த போது 1ம் எதிரி தனது அப்பா கருப்பையாவை தவறாக பேசினார் என்றும் தான் ஏன் இவ்வாறு பேசுகிறாய் என்று 1ம் எதிரியிடம் கேட்டதற்கு தன்னை 2 எதிரிகளும் சேர்ந்து அடித்து குத்தி கீழே தள்ளிவிட்டு தனக்கு நெற்றியிலும், மூக்கிற்கு மேலும் காயம் ஏற்படுத்தினார் என்றும் தனக்கு அடிபட்டவுடன் அங்கு இருந்தவர்கள் விலக்கி விட்டார்கள் என்றும் அதன்பிறகு தான் சிங்கம்புணரி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தேன் என்றம் பின்னர் தான் சிகிச்சை முடித்து காவல் நிலையம் சென்று அ.த.சா.ஆ–1 புகார் மனு கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

6(2) அ.சா.2 கருப்பையா சம்பவத்தை கண்ணுற்ற, காயம்பட்ட நபராவார். இவர் அ.சா.1ன் தகப்பனாராவார். இவர் தனது சாட்சியத்தில் எதிரிகள் தன்னையும், தனது மகன் அ.சா.1யை அசிங்கமாக பேசி, தாக்கி, கொலை மிரட்டல் விடுத்த குற்ற நிகழ்வினை கண்ணுற்றது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

6(3) அ.சா.3 பாண்டிசெல்வன் சம்பவத்தை கண்ணுற்ற நபராவார். இவர் தனது சாட்சியத்தில் எதிரிகள் அ.சா.1 மற்றும் அ.சா.2யை அசிங்கமாக பேசி, தாக்கி, கொலை மிரட்டல் விடுத்த குற்ற நிகழ்வினை கண்ணுற்றது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.07.31 17:22:27 +0500

6(4). அ.சா.4 தவமணி, அ.சா.5 பாலு ஆகியோர்கள் பார்வை மகஜர் சாட்சிகளாவர். இவர்கள் தங்களது சாட்சியத்தில் பார்வை மகஜர் ஆவணத்தில் கையொப்பம் செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளனர்.

6(5). அ.சா.6 நிஷா மருத்துவர் தனது சாட்சியத்தில் அ.சா.1 தன்னை 25.12.21ம் தேதி மாலை 6.15 மணிக்கு சிங்கம்புணரி சுடுகாட்டில் வைத்து அடித்ததாக சிகிச்சைக்கு வந்தவரை பரிசோதனை செய்ததில் தலையின் முன்நெற்றியிலும், கையிலும் சிராய்ப்பு காயம் இருந்ததால் சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட காயம் சிறுகாயம் என அ.த.சா.ஆ–4 விபத்து பதிவேட்டு நகல் வழங்கியதாக சாட்சியம் அளித்துள்ளார்.

6(6). அ.சா.7 சூரியபிரகாஷ் சம்பவத்தை கண்ணுற்ற நபராவார். இவர் தனது சாட்சியத்தில் எதிரிகள் அ.சா.1 மற்றும் அ.சா.2 யை அசிங்கமாக பேசி, தாக்கி, கொலை மிரட்டல் விடுத்த குற்ற நிகழ்வுகளை கண்ணுற்றது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

6(7). அ.சா.8 கணேசபெருமாள் சிங்கம்புணரி காவல்நிலைய தலைமை காவலர் 28.12.2021ம் தேதி அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகார்மனுவினை பெற்று மனு ரசீது எண்:375/2021 வழங்கியது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

6(8). அ.சா.9 பிரேம்குமார் சார்பு ஆய்வாளர் தனது சாட்சியத்தில் 30.12.2021ம் தேதி 12 மணிக்கு சார்பு ஆய்வாளர் திரு.குகன் நிலைய பொறுப்பில் இருந்த போது ரசீது எண்:375/2021 யை பார்வையிட்டு நிலைய குற்ற எண்:271/2021 இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 506(2)ன் கீழ் அ.த.சா.ஆ–5 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, 13 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.த.சா.ஆ.6 பார்வை மகஜர் மற்றும் அ.த.சா.ஆ.7 மாதிரி வரைபடம் தயார் செய்து, பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த சிங்கம்புணரி அரசு மருத்துவமனை மருத்துவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, வழக்கு விசாரணையை முடித்து எதிரிகளின் மீது

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.07.31 17:22:34 +0500

குற்றஇறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என சாட்சியம் அளித்துள்ளார்.

7. அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தபட்ட சாட்சிகளின் சாட்சியத்தில் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு பாதகமான சங்கதிகளை குறித்து கு.வி.மு.ச.313(1)(ஆ)ன் கீழ் குற்றம்சாட்டப்பட்டவர்களிடம் எடுத்துக்கூறி விளக்கி வினவிய போது அரசுத்தரப்பு சாட்சியம் பொய் என்றும், தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை என்றும் கூறினர்.

8. பின்னிட்டு இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன.

9. அரசு தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது புகார்தாரரும், காயம்பட்ட நபரான அ.சா.1ம், சம்பவத்தை கண்ணுற்ற காயம்பட்ட நபரான அ.சா.2ம் எதிரிகள் அசிங்கமாக பேசி, தாக்கி, கொலை மிரட்டல் விடுத்தது குறித்து வாய்மொழியாக சாட்சியம் அளித்துள்ளனர். மேலும் அ.சா.1–ன் சாட்சியத்திற்கு ஆதரவாக சம்பவத்தை கண்ணுற்ற அ.சா.2 மற்றும் அ.சா.7 வரையிலான சாட்சிகளின் சாட்சியங்கள் அமைந்துள்ளது என்றும், எனவே எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்று வாதம் எடுத்துரைத்தார்.

10. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது அரசு தரப்பு எதிரிகளுக்கு எதிரான குற்றத்தை நிரூபணம் செய்ய தவறி விட்டது என்றும். இவ்வழக்கில் புகார்தாரருக்கும் உறவுமுறைகளுக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாக எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து அதன் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், எனவே எதிரியை விடுதலை செய்யவேண்டும் என்றும் வாதம் எடுத்துரைத்தார்.

11 .**தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள்:–**

(அ). இவ்வழக்கின் 1ம் குற்றம்சாட்டப்பட்டவர் மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2)ன் கீழும், 2வது குற்றம்சாட்டப்பட்டவர் மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(2)ன் கீழும் வனையப்பட்ட குற்றத்தை அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்துள்ளதா?

(ஆ).ஆம் எனில் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு வழங்க வேண்டிய தண்டனை என்ன என்பதேயாகும்.

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.07.31 17:22:40 +0500

12 .**<u>பரிசீலனையும் தீர்வும்:-</u>**

12(1) இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கானது கடந்த 25.12.2021ம் தேதி மாலை 17.30 மணியளவில் நிகழ்நிலை புகார்தாரர் வினோத்குமார் மற்றும் கருப்பையா ஆகிய இருவரும் சிங்கம்புணரி மயானத்தில் நடந்த உறவினர் இறுதி காரியத்தில் கலந்து கொண்டிருந்த போது கருப்பையா 2வது எதிரியை பார்த்து சற்று தள்ளி நிற்க சொன்ன போது 1வது எதிரி சோலைமலை நிகழ்நிலை புகார்தாரரை பார்த்து ஏண்டா தயோழி என் அப்பாவையே தள்ளி நிற்க சொல்லுறியாடா தேவடியா பயலே என்று அசிங்கமாக திட்டியதால் ஏன் இப்படி அப்பாவை அசிங்கமாக திட்டுகிறாய் என்று நிகழ்நிலை புகார்தாரர் கேட்டதற்கு 1வது எதிரி அருகில் கிடந்த அபாயகரமான ஆயுதமான கல்லை எடுத்து நிகழ்நிலை புகார்தாரர் நெற்றியில் தாக்கி, பின்னர் கையால் தாக்கி கீழே தள்ளியதாகவும், 2வது எதிரி நிகழ்நிலை புகார்தாரரை கைகளால் தாக்கி சாதாரண காயத்தை ஏற்படுத்தியதாகவும், எதிரிகள் இருவரும் கைகளில் கற்களை எடுத்து கொண்டு தலைக்கு மேல் தூக்கி கொல்லாமல் விடமாட்டோம் என குற்றமுறு கொலை மிரட்டல் விடுத்து குற்றம் புரிந்துள்ளதாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

12(2). எதிரிகளுக்கு எதிராக இதச பிரிவு 294(பி) ன் கீழ் குற்றசாட்டு வனையப்பட்டுள்ளது. இதச பிரிவு 294(பி)ன் கீழான குற்றச்சாட்டை பார்க்கும் போது ஒரு நபர் அசிங்கமான வார்த்தைகளை உபயோகித்திருக்க வேண்டும். அந்த வார்த்தைகளை பொது இடத்தில் பிறர் முன்னிலையில் பயன்படுத்தியிருக்க வேண்டும். அதனால் பாதிக்கப்பட்ட நபருக்கு பிறர் முன்னிலையில் அவமானம் நேர்ந்து மனஉளைச்சல் ஏற்பட்டிருக்க வேண்டும். அதை பார்த்த பிற நபர்களுக்கு அருவருப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். இவை அனைத்தும் செய்யப்பட்டிருந்தால் மட்டுமே இதச பிரிவு 294(பி)ன் கீழ் தண்டனைக்குரிய செயலாகும். வெறுமனே தகாத வார்த்தைகள் உதிர்ப்பது மட்டுமே இதச பிரிவு 294(பி)ன் கீழ் தண்டனைக்குரிய செயல் என்று கருத இயலாது.

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.07.31 17:22:48 +0500

12(3). இவ்வழக்கில் புகார்தாரரும், காயம்பட்ட நபரான அ.சா.1 தனது புகாரில் 25.12.2021ம் தேதி சிங்கம்புணரி சுடுகாட்டிற்கு பிரேத்தை எடுத்து சென்று பிரேதத்தினை இறக்கி வைத்து விட்டு இறுதி காரியங்கள் செய்து கொண்டிருந்த போது அங்கு நின்ற நபர்களை எனது அப்பா கருப்பையா கொஞ்சம் ஓரமாக தள்ளி நில்லுங்கள் என்று சொன்ன போது அங்கு நின்ற எதிரிகள் தனது அப்பாவை பார்த்து ஏன்டா தேவடியா மகனே இங்கே எங்களை நிற்க கூடாதுன்னு சொல்லுற என்று அசிங்கமாக பேசினார் என்றும் தான் வயதில் மூத்தவரை இப்படி அசிங்கமாக பேசுகிறாய் என்று கேட்டதற்கு காளிதாஸ் இந்த தேவடியா பயலுககிட்ட எல்லாம் பேசிக்கிட்டு இருக்கிறாய் அவனை அடித்து கொல்லுடா என்று அசிங்கமாக பேசினார் என்றும் சோலைமலை இங்கு நாங்கள் தான்டா சண்டியர் எங்களையே தள்ளி நிக்க சொல்லுறியா என்று அசிங்கமாக பேசியதாக கூறியுள்ளார்.

12(4). அ.சா.1 தனது சாட்சியத்தில் சுமார் 5 வருடத்திற்கு முன்பு சிங்கம்புணரியில் தன்னுடைய உறவினர் என் மாமாவின் அம்மா இறந்த நிகழ்விற்கு தான் மாயாணத்தில் இறுதி நிகழ்ச்சியில் இருந்த போது 1ம் எதிரி தனது அப்பா கருப்பாவையாவை தவறாக பேசினார் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 தனது சாட்சியத்தில் புகாரில் கூறியுள்ள கெட்ட வார்த்தை குறிப்பிட்டு எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. மேலும் அ.சா.1 தனது புகாரில் எதிரிகள் தன்னை அசிங்கமாக பேசியதாக எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை.

12(5). சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 தனது சாட்சியத்தில் 2ம் எதிரி தன்னை தேவடியா பயலே என்று தன்னை அசிங்கமாக பேசினார் என்றும் அ.சா.1 அதை கேட்டதற்கு அவரையும் 2ம் எதிரி அசிங்கமாக பேசினார் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 தனது சாட்சியத்தில் 1வது எதிரி தன்னை திட்டியதாக எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை.

12(6). அ.சா.2 தனது சாட்சியத்தில் 2வது எதிரி தன்னை அசிங்கமாக பேசியதை அ.சா.1 கேட்டதற்கு அவரையும் 2வது எதிரி அசிங்கமாக பேசினார்

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.07.31 17:22:55 +0500

என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரிகள் இருவரும் தன்னை அசிங்கமாக திட்டியதாக எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. அ.சா.1 மற்றும் அ.சா.2 ம் எதிரிகள் அசிங்கமாக பேசியது குறித்து ஒருவருக்கொருவர் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளனர்.

12(7). சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.7 தனது சாட்சியத்தில் சோலைமலை (1ம் எதிரி) என்பவர் தனது மாமா கருப்பையாவை தேவடியா மகனே என அசிங்கமாக பேசினார் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 கருப்பையா தனது சாட்சியத்தில் 2ம் எதிரி தன்னையும், தனது மகனான அ.சா.1 யையும் அசிங்கமாக பேசினார் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 தனது சாட்சியத்தில் 1ம் எதிரி தன்னை அசிங்கமாக பேசியது குறித்து எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.7 ஆகியோர்கள் தங்களது சாட்சியத்தில் எதிரிகள் அசிங்கமாக பேசியது குறித்து ஒருவருக்கொருவர் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளனர்.

12(8). அ.த.சா.ஆ–7 மாதிரி வரைபடத்தை பரிசீலிக்கையில் சம்பவ இடமானது எரிமேடைக்கு அருகில் என குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பவ இடத்தில் அ.சா.1ன் உறவினர்கள் அனைவரும் ஒன்று கூடி இறந்த நபரின் பிரேதத்தை எரிக்கும் சுடுகாட்டின் எரிமேடை என்பது தெரிய வருகிறது. சம்பவ இடத்தில் ஒன்று கூடிய சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள் யாரும் எதிரிகள் அசிங்கமாக பேசியதால் தங்களுக்கோ, அருகில் இருந்தவர்களுக்கோ அவமானமோ, அருவருப்போ ஏற்பட்டதாக எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை.

12(9). அ.சா.1, அ.சா.2ம் தங்களது சாட்சியத்தில் எதிரிகள் தங்களை அசிங்கமாக பேசியதால் தங்களுக்கோ, அங்கிருந்த பிற நபர்களுக்கோ அருவருப்பு மற்றும் அவமானம் நேர்ந்தது என்று எவ்வித சாட்சியமும் அளிக்காத நிலையில் இதச பிரிவு 294(பி)ன் கீழான ஆக்கக் கூறுகள் இல்லாத நிலையில் எதிரிகள் இதச பிரிவு 294(பி)ன் கீழ் குற்றம் புரிந்தததாக கருத இயலவில்லை. இந்நிலையில் எதிரிகளுக்கு எதிரான இதச பிரிவு 294(பி)ன் கீழான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்படவில்லை.

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.07.31 17:23:01 +0500

12(10). 1வது எதிரி அருகில் கிடந்த அபாயகர ஆயுதமான கல்லை எடுத்து நிகழ்நிலை புகார்தாரர் நெற்றியில் தாக்கியும், கையால் தாக்கி கீழே தள்ளி சாதாரண காயத்தை ஏற்படுத்தியதாக இதச பிரிவு 324ன் கீழும், 2வது எதிரி நிகழ்நிலை புகார்தாரரை கைகளால் முதுகு, கன்னத்தில் மாறி மாறி அடித்து சாதாரண காயத்தை ஏற்படுத்தியதாக இதச பிரிவு 323ன் கீழும் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

12(11). அ.சா.1 தனது புகாரில் சோலைமலை இங்க நாங்கள் தான்டா சண்டியர் எங்களையே தள்ளி நிக்க சொல்லுறீயா என்று அசிங்கமாக பேசி அங்கு கிடந்த கல்லை எடுத்து நெற்றியில் அடித்து கீழே தள்ளிவிட்டார் என்றும் அப்போது காளிதாஸ் கையால் என் முதுகு, கன்னத்தில் மாறி மாறி அடித்தார் என்று கூறியுள்ளார். அ.சா.1 தனது சாட்சியத்தில் தன்னை 2 எதிரிகளும் சேர்ந்து அடித்து குத்தி கீழே தள்ளிவிட்டு தனக்கு நெற்றியிலும், மூக்கிற்கு மேலும் காயம் ஏற்படுத்தினார் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 தனது சாட்சியத்தில் 1வது எதிரி கல்லால் தனது நெற்றியில் அடித்ததாகவோ, 2வது எதிரி கையால் தனது முதுகு, கன்னத்தில் அடித்ததாகவே எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை.

12(12). அ.சா.1 தனது புகாரில் சுடுகாட்டில் பிரேத்தினை இறக்கி வைத்து விட்டு இறுதி காரியங்கள் சென்று கொண்டிருந்த போது அங்கு நின்ற நபர்களை தனது அப்பா கருப்பையா கொஞ்சம் ஓரமாக தள்ளி நில்லுங்கள் என்று சொன்னார் என்று கூறியுள்ளார். அ.சா.2 தனது சாட்சியத்தில் சுமார் 5.30 மணியளவில் சுடுகாட்டிற்கு சென்று திரும்பும் போது 2ம் எதிரி நடனம் ஆடிக்கொண்டிருந்ததால் நான் தள்ளி போக சொன்னேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 புகாரில் இல்லாத புதிய சங்கதி குறித்து மிகைப்படுத்தி சாட்சியம் அளித்துள்ளது தெரிய வருகிறது.

12(13). அ.சா.1 தனது புகாரில் சோலைமலை அங்கு கிடந்த கல்லை எடுத்து தனது நெற்றியில் அடித்து கீழே தள்ளி விட்டார் என்றும் காளிதாஸ் கையால் தனது முதுகு, கன்னத்தில் மாறி மாறி அடித்தார் என்று கூறியுள்ளார். அ.சா.2

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.07.31 17:23:08 +0500

தனது சாட்சியத்தில் 2ம் எதிரி தன் மகனை அடித்து முகத்தில் காயம் ஏற்படுத்தினார் என்று சாட்சியம் அளித்துள்ளார். சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.7 தனது சாட்சியத்தில் எதிரிகள் இருவரும் சேர்ந்து கல்லை வைத்து அ.சா.1யை நெற்றியில் அடித்து விட்டார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.7 ஆகியோர்கள் சம்பவ நேரத்தில் சம்பவ இடத்தில் எதிரிகள் தாக்கியது குறித்து ஒருவருக்கொருவர் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளனர்.

12(14). சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.7 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் நான் வினோத்குமார், கருப்பையாவுடன் வந்தேன் என்றும், சுடுகாட்டில் கூட்டமாக இருந்தது என்றும் 7–8 நபர்கள் சத்தம் போட்டு சண்டையை விலக்கிவிட்டார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1(வினோத்குமார்), அ.சா.2(கருப்பையா) மற்றும் அ.சா.7 ஆகியோர்கள் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டார்களா? சுடுகாட்டில் கூட்டமாக இருந்ததால் சென்று பார்த்தார்களா? என்ற ஐயப்பாடு எழுகிறது.

12(15). அ.சா.7 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் எதிரிகள் இருவரும் சேர்ந்து கல்லை வைத்து அ.சா.1 வினோத்குமாரை நெற்றியில் அடித்து விட்டார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.7 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் சோலை எனது மாமாவை அடித்தார் என்றும் வினோத்குமார் மட்டும் மருத்தவமனைக்கு சென்றார் என்று சாட்சியம் அளித்துள்ளார். சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.7 தனது முதல்விசாரணை சாட்சியத்திற்கு முற்றிலும் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். எனவே அ.சா.1க்கு எதிரிகளால் காயம் ஏற்பட்டதா? என்ற ஐயப்பாடு எழுகிறது.

12(16). சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 தனது சாட்சியத்தில் சுடுகாட்டில் தன் அப்பாவை எதிரிகள் பேசி வாக்குவாதம் செய்தார்கள் என்றும் அதை என் தம்பி கேட்க போனதால் அவரை அடித்து காயப்படுத்தினார்கள் என்றும் தான் என் தம்பியை அடித்த போது பார்க்கவில்லை என்றும் சண்டை

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.07.31 17:23:15 +0500

போடும் சத்தம் கேட்டு பார்த்தேன் என்றும் தன் தம்பிக்கு முகத்தில் பல இடங்களில் காயம் இருந்தது என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3 தனது சாட்சியத்தில் சத்தம் கேட்டு பார்த்ததாக சாட்சியமளித்துள்ள நிலையில் அ.சா.3 சம்பவத்தை கண்ணுற்றாரா? என்ற ஐயப்பாடு எழுகிறது.

12(17). அ.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் எதிரிகளை இதற்கு முன்னர் நான் பார்த்தது இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் எதிரியை இதற்கு முன்பாக நான் பார்த்ததில்லை என்றும் மற்ற எதிரியையும் இதற்கு முன்பாக நான் பார்த்ததில்லை என்றும் சாட்சி சூரிய பிரகாஷ் (அ.சா.7) எனது உறவினர் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1, அ.சா.7 ஆகியோர்கள் தங்களது சாட்சியத்தில் எதிரிகளை அடையாளப்படுத்தி எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை.

12(18). அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவரான அ.சா.6 சிங்கம்புணரி அரசு மருத்துவமனை மருத்துவர் தனது சாட்சியத்தில் 25.12.2021 ம் தேதி மாலை 6.15 மணிக்கு வினோத்குமார் தன்னை தெரிந்த நபர் அன்றையதினம் 5.30 மணிக்கு சிங்கம்புணரி சுடுகாட்டில் வைத்து அடித்ததாக சிகிச்சைக்கு வந்தவரை பரிசோதித்த போது தலையின் முன் நெற்றிலும், கையிலும் சிராய்ப்பு காயம் இருந்தது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

12(19). அசா.1 தனது புகாரில் 1 வது எதிரி கீழே கிடந்த கல்லை எடுத்து நெற்றியில் அடித்து கீழே தள்ளிவிட்டார் என்றும் 2 வது எதிரி கையால் முதுகு, கன்னத்தில மாறி மாறி அடித்தார் என்று கூறியுள்ளார். அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரிகள் இருவரும் அடித்து குத்தி கீழே தள்ளிவிட்டு நெற்றியிலும், மூக்கிற்கு மேலும் காயம் ஏற்படுத்தினார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 தனது சாட்சியத்தில் தன் மகனை அடித்து முகத்தில் காயம் ஏற்படுத்தினார் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.6 மருத்துவர் தனது சாட்சியத்தில் அ.சா.1 க்கு கையிலோ, மூக்கிலோ காயம் ஏற்பட்டதாக எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை.

12(20). அ.த.சா.ஆ–4 விபத்து பதிவேட்டு நகலை பரிசீலிக்கையில்

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.07.31 17:23:22 +0500

25.12.2021ம் தேதி 6.15 மணிக்கு வினோத்குமார் என்பவர் தன்னை 5.30 மணிக்கு தெரிந்த நபர் தன்னை  தாக்கியதாக சிகிச்சைக்கு வந்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.1 தனது புகாரில் 1வது எதிரி கல்லாலும், 2வது எதிரி கையாலும் தாக்கியதாக குறிப்பிட்டு புகார் கொடுத்துள்ள நிலையில் ஒரு நபரை மட்டும் குறிப்பிட்டு மருத்துவரிடம் கூறியிருப்பதை பார்க்கும் பொழுது, எதிரிகளால் அசா.1க்கு காயம் ஏற்பட்டதா? என்ற ஐயப்பாடு எழுகிறது. மேலும் அ.சா.6 மருத்துவ சாட்சியம் காயம்பட்ட நபரான அ.சா.1 மற்றும் சம்பவத்தை கண்ணுற்ற நபரான அ.சா.2ன் சாட்சியத்திற்கு வலுசேர்க்கும் விதமாக அமையவில்லை.

12(21). அ.த.சா.ஆ.1 புகார்மனுவில் தனக்கு நெற்றியில் ரத்த காயம் இருந்ததால் தனது அப்பா என்னை சிங்கம்புணரி அரசு மருத்துவமனையில் கொண்டு வந்து சிகிச்சைக்கு சேர்த்தார் என்று கூறியுள்ளார். அ.சா.2 தனது சாட்சியத்தில் சிங்கம்புணரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 சிகிச்சைக்கு சென்றது குறித்து ஒருவருக்கொருவர் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளனர்.

12(22). அ.த.சா.ஆ–4 விபத்து பதிவேட்டு நகலை பரிசீலிக்கையில் கொண்டு வந்தவர் பெயர் விவரம் குறித்து குறிப்பிடவில்லை. அ.சா.1யை அவரது தகப்பனார் சிகிச்சைக்கு அழைத்து வந்திருந்தால் அவரது பெயர் விவரம் குறித்து குறிப்பிட்டு கூறியிருப்பார்.

12(23). அ.சா.2 தனது சாட்சியத்தில் தன் மகன் வைத்திருந்த செல்போன் மற்றும் ரூ.5000/– பணத்தை எதிரிகள் பிடுங்கி கொண்டார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் செல்போன் மற்றும் பணம் களவு போன விவரத்தை போலீஸ்–ல் புகார் கொடுக்கும் போது எழுதிக் கொடுத்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1. தனது புகாரில் மேற்படி சங்கதிகள் குறித்து குறிப்பிட்டு புகார் அளிக்கவில்லை. அ.சா.2 புகாரில் இல்லாத சங்கதிகள் குறித்து மிகைப்படுத்தி சாட்சியம் அளித்துள்ளார் என்பது தெரிய வருகிறது.

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.07.31 17:23:28 +0500

12(24). அ.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் அன்றையதினமே போலீசார் சுடுகாட்டிற்கு வந்து விட்டார் என்றும் அன்றையதினமே புகார் கொடுத்துவிட்டேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.த.சா.ஆ.1 புகார்மனுவினை பரிசீலிக்கையில் புகாரானது 2 நாட்கள் கழித்து 28.12.2021ம் தேதி கொடுக்கப்பட்டதாக காணப்படுகிறது. எனவே அ.சா.2ன் சாட்சியம் உண்மை தன்மையுடனும், நம்பகத் தன்மையுடனும் காணப்படவில்லை.

12(25). அ.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் எதிரிகளை இதற்கு முன்னர் நான் பார்த்தது இல்லை என்றும் எதிரிகள் எனது உறவினர்கள் என்றால் தெரியாது என்றும் எதிரிகள் பெயர் போலீசார் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான் என்றும் புகார் காவல்நிலையத்தில் எழுதி கொடுத்தேன் என்றும் எனக்கு புகார் எழுத தெரியாததால் போலீசாரிடம் கேட்டு எழுதினேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் புகாரில் என்ன எழுதியிருந்தது என்று நான் படித்து பார்க்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே அ.த.சா.ஆ.1 புகார்மனு உண்மைதன்மையுடையதா? நம்பகத் தன்மையுடையதா? என்ற ஐயப்பாடு எழுகிறது.

12(26) அசா.8 குறுக்கு விசாரணை சாட்சியத்தில் சம்பவம் 25.12.2021ம் தேதி நடைபெற்றது என்றும் புகார் 28.12.2021ம் தேதி கொடுக்கப்பட்டது என்றும் காயம்பட்ட நபர் மருத்துவ சிகிச்சை பெற்று பின்னர் காவல்நிலையம் ஆஜராகி புகார் கொடுத்தார் என்றும் காலதாமதத்திற்கு காரணம் சொல்லவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.த.சா.1 தனது புகார்மனுவினை பரிசீலிக்கையில் சம்பவமானது 25.12.2021ம் தேதி மாலை 5.30 மணிக்கு நடந்ததாகவும், புகாரானது 28.12.2021ம் தேதி 19.00 மணிக்கு அ.சா.1னிடம் புகார்மனு பெற்று ரசீது எண்:375/2021 கொடுத்ததாக காணப்படுகிறது. சம்பவத்திற்கு பின்னீடு 3 நாட்கள் கழித்து காலதாமதமாக பின்யோசனை செய்து புகார்மனு கொடுக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. மேற்படி காலதாமதத்திற்கான காரணம்

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.07.31 17:23:35 +0500

குறித்து அரசு தரப்பில் விளக்கப்படவில்லை.

12(27) அ.த.சா.ஆ–1 புகார்மனுவினை பரிசீலிக்கையில் 30.12.2021ம் தேதி 12.00 மணிக்கு புகார்மனுவினை பரிசீலனை செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாக காணப்படுகிறது. இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் புகார் கொடுத்தது 28ம் தேதி, முதல் தகவல் அறிக்கை 30ம் தேதி பதியப்பட்டது என்றால் சரிதான் என்றும் இரண்டு நாட்கள் காலதாமதத்தற்கு முதல் தகவல் அறிக்கையின் காரணம் சொல்லவில்லை என்றால் சரிதான் என்றும் காவல்நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30ம் தேதி என்று முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் என்றும் மேற்கண்ட காலதாமதங்கள் குறித்து சொல்லவில்லை என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி சரியான முறையில் புலன்விசாரணை மேற்கொண்டாரா? என்ற ஐயப்பாடு எழுகிறது.

12(28) பார்வை மகஜர் சாட்சியான அ.சா.4 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் போலீசார் எழுதிய ஆவணத்தை நான் படித்து பார்க்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். மற்றொரு பார்வை மகஜர் சாட்சியான அ.சா.5 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் சண்டை போட்டு கொண்டிருந்ததை தான் பார்க்கவில்லை என்றும் சொன்னார்கள் கேள்விபட்டேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.த.சா.ஆ.6 பார்வை மகஜர் ஆவணம் சம்பவ இடத்தில் தயார் செய்யப்பட்டதா? காவல்நிலையத்தில் தயார் செய்யப்பட்டதா? என்ற ஐயப்பாடு எழுகிறது.

12(29) அ.த.சா.ஆ–7 மாதிரி வரைபடத்தை பரிசீலிக்கையில் சம்பவ இடம் எரிமேடைக்கு அருகில் என குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.5 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் மேற்படி இடத்திற்கும் சுடுகாட்டிற்கும் 1/2 கிமீ தூரம் இருக்கும் என்று சாட்சியம் அளித்துள்ளார். சம்பவமானது சுடுகாட்டில் நடந்ததா? சுடுகாட்டிற்கு வெளியே நடந்ததா? என்ற ஐயப்பாடு எழுகிறது. எனவே சம்பவ இடம் குறித்து அரசு தரப்பில் நிரூபணம் செய்யவில்லை.

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.07.31 17:23:41 +0500

12(30) புகார்தாரரான அ.சா.1ம், சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2, அ.சா.7 ஆகியோர்கள் தங்களது சாட்சியத்தில் எதிரிகள் தாக்கியது குறித்து தனது புகாரில் உள்ள சங்கதிகளுக்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதாலும், சம்பவத்தில் பாதிக்கப்பட்ட அ.சா.1க்கு முன்நெற்றியிலும், கையிலும் ஏற்பட்ட காயம் 1வது எதிரியால் ஏற்பட்டது என்பதை தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யாத நிலையில், அ.சா.1 கொடுத்த புகார் உண்மை தன்மையுடையதா? நம்பகத் தன்மையுடையதா? என்ற ஐயப்பாடு எழுகிறது. அ.த.சா.ஆ-4 விபத்து பதிவேட்டின் மூலம் அ.சா.1க்கு ஏற்பட்ட காயம் எதிரிகளால் ஏற்பட்டது என்பதை அரசு தரப்பில் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யாத நிலையிலும், அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.7ன் சாட்சியங்களுக்கு வலுசேர்க்கும் விதமாக அ.சா.6 மருத்துவ சாட்சியம் அமையப்பெறவில்லை என்பதாலும், சங்கிலி தொடராக தொடர்ந்து நடைபெற்று இருக்க வேண்டிய புலன்விசாரணை முழுமையாக இல்லாமல் இடையே அற்றுபோய் உள்ளது. புலன்விசாரணை முழுமையாக இல்லை. எனவே 1வது எதிரிக்கு எதிரன இதச பிரிவு 324ன் கீழும், 2வது எதிரி மீது இதச பிரிவு 323ன் கீழான குற்றச்சாட்டு தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யவில்லை.

12(31). எதிரிகளுக்கு எதிரான இதச பிரிவு 506(2)ன் கீழான குற்றச்சாட்டை பரிசீலக்கையில் எங்களிடம் பிரச்சனை செய்தால் உங்களை கொல்லாமல் விமாட்டோம் என்று கையில் வைத்திருந்த கல்லை காட்டி மிரட்டி விட்டு சென்றார்கள் என்று அ.சா.1 தனது புகாரில் சொல்லியுள்ளார். அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.7ம் தங்களது சாட்சியத்தில் எதிரிகள் மிரட்டியது குறித்து எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. எனவே எதிரிகளுக்கு எதிரான இதச பிரிவு 506(2)ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை.

12(32). இவ்வழக்கில் அ.சா.1ன் சாட்சியம் புகாருக்கும், 161(3)கு.வி.மு.ச வாக்குமூலத்திற்கும் முற்றிலும் முரண்பட்டு காணப்படுகிறது. அ.சா.1

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.07.31 17:23:47 +0500

நீதிமன்றத்தில் முதல் முறையாக புதிய சங்கதிகளை குறித்தும், மிகைப்படுத்தி சாட்சியம் அளித்துள்ளார் என்பதை காண முடிகிறது. அ.சா.1 க்கு ஏற்பட்ட காயத்திற்கு ஆதரவாக அ.சா.6 மருத்துவர் சாட்சியம் அமையப் பெறாத நிலையில், அ.சா.1 க்கு எதிரிகளால் காயம் ஏற்பட்டது என்ற அரசு தரப்பு வழக்கை சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யாத நிலையிலும், புகார்தாரர் தனது புகாரில் கல் போன்ற ஆயுதத்தால் தாக்கியதாக கூறியுள்ள நிலையில் மேற்படி ஆயுதத்தை அரசு தரப்பில் கைப்பற்றி தாக்கல் செய்யாத நிலையிலும், மேலும் அ.சா.1, அ.சா.2 ன் சாட்சியத்தை உறுதியூட்டும் வகையில் வேறு எந்த சாட்சிகளும் சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.1 ன் சாட்சியம் உண்மை தன்மையுடனும் நம்பகத் தன்மையுடனும் காணப்படவில்லை. இந்நீதிமன்றத்தின் நம்பிக்கையை பெறவில்லை. தனிப்பட்ட சாட்சியம் அல்லாத உறுதியூட்டப்படாத நலன் கொண்ட அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.7 ன் சாட்சியங்களை மட்டுமே அடிப்படையாக கொண்டு அரசு தரப்பில் சொல்லப்பட்டவாறு குற்றச் சம்பவம் நிரூபணம் செய்யப்பட்டது என எடுத்துக் கொள்ள முடியாது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக,**

13. குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பு நிரூபணம் செய்ய தவறிவிட்டதென முடிவு செய்து 1ம் குற்றம்சாட்டப்பட்டவர் மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2)ன் கீழும், 2 வது குற்றம்சாட்டப்பட்டவர் மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(2)ன் கீழும் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து குற்றம்சாட்டப்பட்டவர்களை கு.வி.மு.ச பிரிவு 248(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. குற்றம்சாட்டப்பட்டவர்கள் கு.வி.மு.ச பிரிவு 437A–ன் கீழ் எழுதிக்கொடுத்த பிணை பத்திரம் மேல்முறையீடு காலத்திற்கு பின் தானாக ரத்தாகும் என இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

14.இவ்வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அதனால் சான்று பொருட்கள் குறித்து எவ்வித உத்தரவும்

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.07.31 17:23:55 +0500

பிறப்பிக்கப்படவில்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஜீலை திங்கள் 31ம் நாள் வெள்ளிக்கிழமை திறந்த நீதிமன்றத்தில் அவை அறிய பகரப்பட்டது.

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.07.31 17:24:01 +0500

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
சிங்கம்புணரி.

**அரசு தரப்பு சாட்சிகள்:–**

| | |
|---|---|
| அ.சா.1 | வினோத்குமார் / புகார்தாரர் /காயம்பட்ட நபர் |
| அ.சா.2 | கருப்பையா / சம்பவத்தை கண்ணுற்ற நபர் |
| அ.சா.3 | பாண்டிசெல்வன் / சம்பவத்தை கண்ணுற்ற நபர் |
| அ.சா.4 | தவமணி / பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.5 | பாலு / பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.6 | நிஷா / மருத்துவர் |
| அ.சா.7 | சூரியபிரகாஷ் / சம்பவத்தை கண்ணுற்ற நபர் |
| அ.சா.8 | கணேச பெருமாள் / தலைமை காவலர் |
| அ.சா.9 | பிரேம்குமார் / சார்பு ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :–**

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 11.02.2026 | அ.சா.1 | புகார்மனு |
| அ.த.சா.ஆ.2 09.04.2026 | அ.சா.4 | பார்வை மகஜரில் உள்ள அ.சா.4ன் கையொப்பம் |
| அ.த.சா.ஆ.3 09.04.2026 | அ.சா.5 | பார்வை மகஜரில் உள்ள அ.சா.5ன் கையொப்பம் |
| அ.த.சா.ஆ.4 27.05.2026 | அ.சா.5 | விபத்து பதிவேட்டு நகல் |
| அ.த.சா.ஆ.5 02.07.2026 | அ.சா.9 | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.6 02.07.2026 | அ.சா.9 | பார்வை மகஜர் |
| அ.த.சா.ஆ.7 02.07.2026 | அ.சா.9 | மாதிரி வரைபடம் |

**அரசு தரப்பு சான்றுபொருள்:– இல்லை**

**எதிரிகள் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருள்: இல்லை**

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.07.31 17:24:08 +0500

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
சிங்கம்புணரி.

<u>குறிப்பு:–</u>

1. எந்த ஒரு சாட்சியும் விசாரணைக்கு 3 முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
3. வழக்கின் விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.

/ உண்மை நகல் / ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.07.31 17:24:14 +0500

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
சிங்கம்புணரி.